# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.**15079**/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு V.தேர்தல்,<br>த/பெ.வடிவேல் நாயக்கர்,<br>மேட்டுபரந்தூர் கிராமம் & அஞ்சல்,<br>(வழி) காரை, காஞ்சிபுரம் மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.<br><br>பொதுத் தகவல் அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>காஞ்சிபுரம் மாவட்டம். |

*****

மனுதாரர் திரு V.தேர்தல் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்கள் திரு T.மதிவாணன், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் திரு K.B.பாண்டுரங்கன், கூடுதல் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் இன்று (24.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 06.12.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களிடம் வளத்தூர் கிராமத்தில் உள்ள சர்வே

எண்.670/1 குறித்துச் சில தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். 23.12.2008 அன்று மேற்படி நிலம் அரசுக்கு உரிய நிலமானதால், அதன் நகல் அரசு விதிமுறைப்படி தனியாருக்கு வழங்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 02.07.2009 அன்று மனுதாரர் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (24.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேற்படி நிலம் 40 ஆண்டுகளாகத் தன்னுடைய அனுபவப் பாத்தியதையில் இருப்பதாகவும், 1977 முதல் மனுதாரரின் பெயர் அடங்கலில் காணப்படுவதாகவும் மனுதாரர் கூறினார். தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பது ஏனைய சட்டங்களை விட மீதூர்ந்து இயங்குவது, அச்சட்டத்தின் அடிப்படையில் கேட்கின்ற அரசு ஆவணங்களின் நகல்கள் எதுவாயினும் மனுதாரருக்கு அளிக்கப்பட வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது. மனுதாரர் கேட்ட தகவல் 23.09.2009 அன்று அளிக்கப்பட்டதாகப் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். மனுதாரரும் அதை ஒப்புக் கொண்டதால் வழக்கு இத்துடன் முடிவடைகின்றது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.15079/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு V.தேர்தல்,
த/பெ.வடிவேல் நாயக்கர்,
மேட்டுபரந்தூர் கிராமம் & அஞ்சல்,
(வழி) காரை, காஞ்சிபுரம் மாவட்டம்.

*"ptl"*